செ.வெ.எண்.798

நாள் 18.09.2010

## பத்திரிக்கை செய்தி

''பேச்சிப்பாறை அணை பலப்படுத்தப்படுமா?'' என்கிற தலைப்பில் 11.09.2010 நாளிட்ட தினமணி நாளிதழில் வெளியிடப்பட்ட செய்திக்கு கீழ்க்கண்டவாறு பதிலறிக்கை அனுப்பப்படுகிறது.

''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை அணையினை ஆய்வு செய்த, அணைகள் பாதுகாப்பு குழுவினரின் பரிந்துரைகளின்படி, உலக வங்கியின் கடனுதவி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள அணைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டு திட்டத்தில் (Dam Rehabilitation and Improvement Project) இரண்டாம் கட்ட (II Phase) திட்டப் பணிகளில் இவ்வணை சேர்க்கப்பட்டு உரிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அணையின் உட்புற சுவரில் நீர்க்கசிவினை தடுக்கும் பணிகள் (upstream face treatment), சாய்வு அணை (Buttress Dam) கட்டும் பணி, அணை தூர்வாரும் பணிகள், பூங்கா அமைக்கும் பணிகள், மரங்கள் நடும் பணிகள் மற்றும் அணையின் பலத்திற்கும், பாதுகாப்பிற்கும் தேவைப்படும் இதர அத்தியாவசிய பணிகளை உள்ளடக்கி ரூ.3325 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் இத்திட்டப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும்.''

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

15/9/10

பிரிவு அலுவலர்

17/9/10